இன்று
என்றும்
நன்று


இன்று மின்னிதழ்

2026
ஜீன்
16–30

இன்று மின்னிதழ் இலவச மாதமிருமுறை

மினுகுதை

சிறப்பிதழ்



அனைவருக்கும் வணக்கம்.

ஒவ்வொரு இதழையும் வித்யாசமாக வெளியிட நமது எழுத்தாளர்கள் பெரிதும் உதவிபுரிகின்றனர்.

திரு.நௌஷாத் கான் சிறப்பிதழை பலரும் பாராட்டினர். இவ்வளவு பிரபலங்களுடன் தொடர்பில் உள்ளவரா என்று ஆச்சர்யத்துடன் கேட்டனர். அவர் எழுத்துப்பணி சிறக்க வாழ்த்தினர்.

இந்த இதழ் மினிகதை சிறப்பிதழாக வெளியாகிறது. படித்து மகிழுங்கள்.

இந்த இதழின் இரண்டாம் பாகமாக கதம்பம் இதழையும் ரசித்து படியுங்கள்.

அடுத்த 2026 ஜூலை 1–15 இதழ் சிறப்பாசிரியராக திரு.கே.அசோகன் அவர்கள் இதழை தயாரிக்கிறார். அவருக்கும் வாழ்த்துக்கள்.

இவ்விதழின்

புதிய எழுத்தாளர்களை வருக... வருக.... என்று வரவேற்கிறோம்.

படைப்பாளர்கள், வாசகர்கள் உங்கள் ஆதரவை தொடர்ந்து எதிர்நோக்குகிறோம்... நன்றி...

ஆசிரியர் வெ.கோபிநாத்,
Whatsapp : 7094053241
e.mail– indhrumail@gmail.com
Web Site : www.indhru.in



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்

புகைப் படம்



நௌஷாத் கான்

முப்பது வருட
வாடகை
வீட்டின்
அவதிகளுக்குபிறகு
சொந்த வீட்டில் குடியேறினேன்
நடுக்கூடத்தில் மாலையிட்டு மாட்டி
வைக்கப்பட்ட
அப்பா –அம்மாவின் புகைப்படம்
என்னை பார்த்து புன்னகைத்தது



இன்று



முத்து ஆனந்த் வேலூர்

இன்று

இன்று திருமணமாகும் 'தன் காதலி' என்றும் 'நன்றாக வாழ வேண்டும்' என்று 'கண்ணீருடன் நினைத்தான்' விக்டர்!

இன்று

ஸ்டேஷனில் ரவுடிகளை 'லாடம்' கட்டும் எஸ் ஐ பரத் தன் பத்து வயது மகனை *இன்று ஓர் 'அடி' அடிக்கக் கூடத் தயங்கினான்!

இன்று

*இன்று வேண்டாம், *இன்று வேண்டாம் என்று ஒவ்வொரு நாளும் தன் 'திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்' லாயர் சங்கர்!

இன்று

மனைவியைத் தினமும் 'கலாய்க்கும்' நாராயணன் இன்று
முதல் முறையாக அவளிடம் 'பல்ப்' வாங்கியதும் 'அதிர்ச்சி'யில் சோர்வானான்!

இன்று

அன்று தனக்குப் 'பேயாழ்வார்' என்று பெயர் வைத்த காதலனுக்கு
*இன்று 'பூதத்தாழ்வார்' என்று பெயர் வைத்தாள் மாதுரி!

இன்று

தோழிகள் அடிக்கடி 'கேலி' செய்ததால் இன்று முதல் தானே வீட்டில் சமையல் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தாள் பானுமதி!

இன்று

*இன்று காவல்துறையில் வேலை கிடைத்ததும் தான் செய்த பழைய வேலைகளை நினைத்துப் பார்த்தான் கவின்!

இன்று

எப்பொழுதும் 'பரமசாது'வாக இருக்கும் முரளி வீட்டில் 'திருடர்களைப் பார்த்ததும்' அவர்களை 'வெளுத்து' வாங்கினான்!

இன்று

பேருந்து 'விபத்தை'ப் பார்த்ததும்
*இன்று முதல் 'பஸ் படிக்கட்டில் நிற்கக் கூடாது' என்று நினைத்தான் சாதிக்!

இன்று

*இன்று 'முதல் முறையாக'ச் 'சமைத்த போது' அம்மாவை 'இனி குறை சொல்லக் கூடாது' என்று நினைத்தாள் சாந்தினி!



பரிசு ரூ.5000

அந்த மனசுதான் கடவுள்!

– ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

தீபாவளிக்கு,தன் மகள் ப்ரஜாவுக்கு 30,000 ரூபாய்க்கு புத்தாடைகள் வாங்கிக் கொடுத்தார் புவனேஷ்.

ஆனால் ப்ரஜா எதையோ பறிகொடுத்தது போல் இருந்தாள்.

தாய் இல்லாக் குழந்தை என ப்ரஜா மேல் உயிரையே வைத்திருந்தார் புவனேஷ்.



மெதுவாக அவள் அருகில் சென்றவர்," ஏன்டா செல்லம் சோகமா இருக்கே?" என்றார்.

"எனக்காவது நீங்க இருக்கீங்க. நம்ம வயல்ல இருக்கிற சோளக்கொல்லை பொம்மைக்கு யாரு டாடி புதுசா தீபாவளி டிரஸ் வாங்கித் தர்றது?" என்று கேட்ட மகளை கட்டி அணைத்துக் கொண்டார் கண்களில் நீர்பெருக.



வீட்டுக்கு வீடு



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அவள் ஊருக்கு போக வேண்டிய பஸ் சற்று லேட் ஆக வந்தாலும் பொறுமை காத்து தனக்கு கிடைத்த சீட்டில் உட்கார்ந்தபின் அம்மாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. எடுத்து பேச ஆரம்பித்தேன்...

கல்யாணத்துக்கு வந்தவர்கள் உன் மாமியார், கணவர், வரலையா... பாட்டி வரலயா.. மற்றும் சிலர் வரலயா என்று



அவர்கள் பற்றிய நிறை குறைகளை கூறி புலம்பி தள்ளினாங்கம்மா... என்றேன்.

ஏண்டா நாம தனியா வந்தோம்? என்று சிலரின் பேச்சு உனக்கு நினைக்கத் தோன்றும். குடும்பம் என்றாலும்... வாழ்க்கை என்றாலும் அப்படித்தான் இருக்கும். நீ அதைக் கடந்து தான் வாழ வேண்டும். நீ இப்பதான் அதை வாழ தொடங்கி உள்ளாய் என்று அம்மா கூற...

சரிம்.... மா என்று பயணத்தை தொடரலானேன்...

ஜீவகாருண்யம்

"என்ன மக்களே! சின்ன புழுப்பூச்சியைக் கூட துன்புறுத்த கூடாது! செய்வீர்களா? பலமுறைக் கேட்டு உறுதிமொழி வாங்கிய மேடைப் பேச்சாளர் ஜீவஜோதி.

மேடையிலிருந்து இறங்கிய போது, "பட்டுப்புடவை சரசரத்தது"!



கே.அசோகன், சென்னை

கரு

"கரு" சுமந்து ஒன்பது மாதமாகி விட்டது. டெலிவரிக்காக காத்திருந்தவள், அலைபேசியின் அழைப்பு குரல் கேட்டு வேகமாக ஓடி மின்னஞ்சல் செய்தாள் "கரு" என்ற சிறுகதையை வளரும் எழுத்தாளரான கனகம்."

புடவை...கடை

ஆறடுக்கு மாடி பட்டுப்புடவை ஷோ ரூம் கட்டிடத்தை, அரைகுறை ஆடையோடு ரிப்பன் வெட்டி பலத்த கைத்தட்டல்களோடு திறந்து வைத்தார் நடிகை ஷோபியா!"

கைநாட்டு

"படிப்பு ஏறாத மகனை" கைநாட்டு, கைநாட்டு" என்று திட்டிக் கொண்டிருந்த போது, "அன்பான மக்களே! உங்கள் பெருவிரல் ரேகைதான் எதிர்கால அடையாளம்" அறிவிப்பு குரல் கேட்டு திகைத்தார் ஆதார் கார்டு அலுவலரான கைலாசம்.!"

அமைதி

"கோர்ட்டல் "சைலன்ட்! சைலன்ட்! சைலன்ட்!" என்று குரல் கொடுக்கும் டவாலியின் வீட்டுக்கு அருகில் உள்ள சவுண்ட் சர்விஸ் கடையில் இருந்து பாடல்கள் சத்தமாக ஒலிப்பரப்பி கொண்டிருக்கிறது.


மீளவும் வருவேன்



சசிகலா விஸ்வநாதன்

ரேணுகா இந்தியா கிளம்ப தயாராகி விட்டாள். விட்டுச் செல்வதும், எடுத்துப் போவதும் ஏராளம். தயக்கத்துடன் குடியேறியவளை தயவுடன் தன் குடிமகளாக அங்கீகரித்து அணைத்துக் கொண்டது, அமெரிக்கா. அமெரிக்க படிப்பும், பணியும், கலாசாரமும் , அவளை உயர்த்தியது. விட்டுப் போக மனமில்லாமல் தான் இந்தியா செல்கிறாள். தன் வேர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தை தன் மக்கள் உணர வேண்டும் என்பதற்காகவே. கட்டுப்பாடற்ற துணிச்சலால் மனிதம் பாதாளத்தில் விழும் அபாயம் அமெரிக்காவில். அந்த வகையான மனத்திடத்தையும் நெஞ்சுறுதியையும் இந்தியாவில் மட்டும்தான் கற்க முடியும். அமெரிக்க வாழ்க்கைக்குத் தேவையான முதிர்ச்சியை தன் மக்களுக்கு கற்பிக்க இந்தியா செல்கிறாள். அமெரிக்க வாழ்வை வெறுத்தோ, துறந்தோ, இந்தியா செல்லவில்லை. மக்களின் பதின் பருவத்தில் பெற வேண்டிய நற் பண்புகளை மக்களுக்கு கற்பித்து மீண்டும் வருவாள். மனவெழுச்சியில் கண்கலங்க, நெஞ்சார்ந்த நன்றிகளுடன் 'சென்று வருகிறேன்' என்று சொல்லி கையசைத்து வாஷிங்டன் நகரத்தில் விமானம் ஏறினாள், ரேணுகா.

கரிசனம்



ம.என்.பாலகிருஷ்ணன்

ஒருவர் மருத்துவமனைக்கு போன் செய்து, "அறை எண் 17–ல் உள்ள நோயாளி ராஜப்பா எப்படியிருக்கிறார்?" என கேட்க,

நர்ஸ் ரமா, "மிகவும் நலமாக இருக்கிறார். அவருடைய சர்க்கரை அளவு, ரத்தக் கொதிப்பு, ECG எல்லாம் நார்மலாக உள்ளது. இன்று அவரை வீட்டிற்கு அனுப்பக்கூடும்" என்றார்.

அந்த நபர், "மிக்க நன்றி சிஸ்டர் " என்றார்.

நர்ஸ் கேட்டார் "நீங்கள் குடும்ப உறுப்பினரா அல்லது நெருங்கிய நண்பரா?"


"நான் அவருக்கு ஐம்பதாயிரம் கடன் கொடுத்தவன். என் கடனைத் திருப்பித் தராம போயிருவாரோன்னு பயந்தேன் " என்றார்.



சு. அருண் பிரகாஷ்

அரசியல் பரிதாபம்

நிறுவனரே கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பின், கோலாகலமாய்க் கொண்டாடி மகிழப்பட்டது, கட்சியின் நிறுவனர் தின விழா!





மலர்மதி

பந்தயம்

பள்ளிப் பருவத்தில் எந்த விஷயமானாலும் பந்தயம் கட்டும் பழக்கமுடைய பாலு, வளர்ந்து பெரியவன் ஆனதும் ரேஸ் கோர்ஸே கதி என கிடந்தான்.


வலி

சாலையோரம் படுத்திருந்த நாய்க்குட்டியை அடித்து விளையாடிக் கொண்டிருந்தான் அகில். டேய் நாய்க்குட்டிய அடிக்காத அதுக்கு வலிக்கும் என்றாள் அம்மா ராதா. எனக்கு வலிக்குதுன்னு எங்கிட்ட நாய்க்குட்டி சொல்லவே இல்லையே என்று திமிராக சொல்லிவிட்டு மீண்டும் நாய்க்குட்டியை அடித்து விளையாட ஆரம்பித்தவன் சட்டென்று கால் இடறி கீழே



ஏ.மூர்த்தி

விழுந்தான். சிராய்ப்பு பலமாக இருந்ததால் வலியால் துடித்தவனுக்கு மருந்திட்டாள் அம்மா. வலியின் வேதனையை உணர்ந்த அகில் ஓடிச்சென்று நாய்க்குட்டியை தூக்கி மடியில் வைத்து சாரி குட்டி இனி உன்னை அடிக்க மாட்டேன் என்று கொஞ்ச ஆரம்பித்தான் பாசமாக.



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்





கோவைக்கவி புவனா



முரண்

ஆங்கிலப் பேராசிரியர் ஸ்டீபன் லாரன்ஸுக்குத் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழறிஞர் முத்தையாவிற்கு ஆங்கிலப் புரபசராகவும் 'அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் ' வழங்கியது அந்தத் தனியார் கல்லூரி!

வலி

தான் 'உயிராக நேசிக்கும்' பாலாஜிக்கு, மாலா 'தன் சிறுநீரகத்தைத் தானமாக வழங்கியும்' அவனுக்கு 'அவள் காதல் ' புரியவேயில்லை!

கானல்

—அரும்பூர். க. குமாரகுரு—

பள்ளியிலிருந்து வீடு திரும்பும் குழந்தைகள் புத்தக பொதியை விட்டெறிவது போல.. இடுப்புக் குழந்தையை தாயின் மடியில் போட்டுவிட்டு.. விடுவிடுவென பின்கட்டுக்கு நடந்தாள் வினோதா.
. 'என்ன.. வந்ததும் வராததுமா.. ஊட்டுற கன்னுக்குட்டி செராவளி அடிச்சிகிட்டு மாட்டுக்கிட்ட ஓடுறமாதிரி ஓடுறா.?! 'யோசனையோடு பேரப்பிள்ளையை தூக்கிக்கொண்டு பின்னே போனார் வினோதாவின் தாயார்.
"யம்மா.. அந்த பய போன் பேசுனப்ப.. நம்ம வீட்டுல 'பயோகாஸ் 'அடுப்புல தான் சோறு பொங்கறோம்னு.. பெருமையாக சொன்னான்.. இங்க வந்து பார்த்தா ஒண்ணையும் காணோமே..?" என்றாள் வினோதா.
. "அடியே.. நீ வாக்கப்பட்ட எடமோ.. டவுண்.. நீங்க குடியிருக்கறதோ அடுக்குமாடி வீட்டுல.. நீ நாளைக்கு பத்து தடவை போன் பண்ணி.. எங்க ஊருல காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு.. அது இதுன்னு புலம்பர.. அதான் தம்பிப்பய உன் அக்கம்பக்கத்து வீட்டுகாரங்களுகிட்ட பெருமையா பேசித்திரியட்டும்னு..
அளந்துவிட்டிருக்கான்... ஆனாலும் அவன் சொன்னதுல பாதி சரிதான்டி.. நம்ம வீட்டு பின் சுவத்துல பாரு... சோள ரொட்டி கணக்கா வணப்பா வரட்டி தட்டி வச்சிருக்கேன்.!"
சிரிப்பலையால் வீடு நிறைந்தது.



"சிங்கமே ஆனாலும்..."

முகில் தினகரன், கோவை

சண்முகம் முப்பது வருடங்களாக மின் சாதனப் பொருள் கடை நடத்துகிறார். அந்த ஊரில் மின் சாதனம் என்றாலே "சண்முகம் எலக்ட்ரிக்கல்ஸ்"தான்.

அவரின் வெற்றிக்கு காரணம் வியாபாரம் மட்டும் இல்லை... உறவையும் சேர்த்து கட்டியிருந்ததுதான்.

கால ஓட்டத்தில், வயது காரணமாக கடையை மகன் கார்த்திக்கிடம் ஒப்படைத்தார்.

முதல் சில மாதங்கள் அவன் பெரிதாக எதுவும் செய்யவில்லை. கடைக்குத் தாமதமாக வருவது, வாடிக்கையாளர் கேட்ட பொருளை "ஸ்டாக் இல்லை நாளைக்கு வாங்க தர்றேன்" என்று திருப்பி அனுப்புவது... பழைய கஸ்டமர்களிடம் அக்கறையில்லாமல் பேசுவது, என இருந்தான்.

அவனுக்குள் ஒரு எண்ணம். "இந்தக் கடைக்கு ஊருக்குள்ளே நல்ல பெயர் இருக்கு.... கஸ்டமர்கள் வேற எங்கே போயிடுவாங்க?"

ஆனால் ஊருக்குள் புதிதாக திறக்கப்பட்ட மின் சாதனப் பொருள் கடை வேறு மாதிரி வேலை செய்தது.

வாடிக்கையாளர்களை பெயர் சொல்லி வரவேற்றார்கள்,

வீட்டுக்கே டெலிவரி செய்தார்கள், ஒரு பொருள் இல்லையென்றாலும் தேடி கொண்டு வந்து கொடுத்தார்கள்.

மெல்ல மெல்ல பழைய கஸ்டமர்ஸ் அங்கே போக ஆரம்பித்தார்கள்.


ஒருநாள் அக்கௌண்ட்ஸ் பார்த்த கார்த்திக்கின் ஆடிப் போனான். வருமானம் பாதியாகக் குறைந்திருந்தது.

அப்போது சண்முகம் சொன்னார், "நான் சேர்த்தது கஸ்டமர்ஸை மட்டும் இல்லைடா... நம்பிக்கையை!... அதை தினமும் காப்பாத்தணும்... நிற்கிற சிங்கத்தை நாய்கள் கூட சுற்ற ஆரம்பிச்சிடும்... அது தாக்க மறந்தா."

கார்த்திக் தலைகுனிந்தான். அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

பெயர், புகழ், பழைய வெற்றி, இவை எதுவும் நிரந்தரம் இல்லை. சிங்கமாய் இருந்தாலும் செயல்பாடு இல்லையென்றால், கடும் பசியோடுதான் சீரழிய வேண்டி வரும், என்று.

வயது



எம்.பி.தினேஷ்.

" தள்ளுவண்டியில் பழ வியாபாரம் செய்யும் 80 வயது முதியவரிடம் ....

" இன்னும் இளைஞரை போல் பணியாற்றுகிறீர்களே எப்படி?" என்றேன் !

" நான் மனதளவில் இனியும் 20 வயது இளைஞன் தான், என் அனுபவத்தின் வயதுதான் 60 என்றார்!" முதியவர்.

அன்பு கட்டளை






குடந்தை பரிபூரணன்

ஒரு திருமணத்திற்குப் போக 2 மணித்தியாலம் அனுமதி கேட்டிருந்தேன்.
"எந்தத் திருமண மண்டபம்... எங்கே இருக்கிறதாம்!" என்று நிர்வாக இயக்குநர் கேட்கிறார் சார். என்றார் ஹெட் கிளார்க்.
புதிதாக வந்திருப்பவர். ரொம்ப கெடுபிடி தான் போலிருக்கிறது. விட்டால் பத்திரிகையைக் கூட காண்பிக்கச் சொல்லுவார் என்ற எரிச்சலை வெளிக்காட்டாமல் எதிரில் போய் வணக்கம் தெரிவித்தேன்.
திருமணத்துக்குப் போறீங்களா... என்று இழுத்தவர், மேசை டிராயரையும் இழுத்தார். துப்பாக்கி எடுக்கும் வில்லனைப் போல!
2000 ரூபா பணத்தை எடுத்து, கம்பெனி கவரில் போட்டு தன் பெயரையும் எழுதி ஒரு திருமணப் பத்திரிகையுடன் என்னிடம் நீட்டினார். "என்னால் இன்று எங்கும் போக முடியாது. பிஸி. என் சார்பாக நீங்கள் இந்த மண்டபத்துக்குப் போய் மாப்பிள்ளையிடம் கவரை கொடுத்து விடுகிறீர்களா என்று புன்னகை பூத்தார். கம்பெனி வேலை போல கனிவுடன் வாங்கிக்கொண்டேன். மனம் மகிழ்ச்சியாய் இருந்தது.

மாற்றம்



நாஞ்சில் நாகராஜன்

காலை எழுந்ததும் பாத்ரூம் செல்வது, பல் துலக்குவது போன்று கோவிந்தனுக்கு கண் விழித்ததும் நாள்காட்டியில் அவரது ராசிக்குரிய பலனை பார்க்கும் பழக்கத்தை கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தவறாமல் கடைபிடித்து வருகிறார். நேற்று அவரது ராசிக்கு" பகை" என்று போட்டிருந்தது.அதை மெய்ப்பிக்கும் வகையில் அவருக்கும் அவரது மனைவிக்கும் பயங்கர சண்டை நடந்தது.
இன்று நாள்காட்டியில் "மாற்றம்" என்று போட்டிருப்பதை பார்த்து என்ன மாற்றம் ஏற்படப்போகிறது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அவரது மனைவி கையில் பழைய மிக்சி சாருடன் வந்து இதில் அரைக்கவே முடியல இதை கொண்டு போய் கடையில் காட்டி இதே போன்று புது மிக்சி ஜார் மாற்றி விட்டு வாங்க, மாற்றினால் தான் இன்றைக்கு சட்னி என்றாள்.
மாற்றம் மிக்ஸி ஜார் ரூபத்தில் வந்ததை நினைத்து கோவிந்தன் வியந்தார்.

டீக்கடை பெஞ்ச் !



பி.ஆர்.கிரிஜா

இனிய காலைப் பொழுது
ஆரவாரமற்ற வெளியூர்
அகவை அறுபதைத் தொட்ட
தோழிகள் சந்திப்பு
மழலையின் குதூகலம்
கலகலக்கும் சிரிப்பொலி
வந்தமர்ந்தனர்
டீக்கடை பெஞ்சில்
சுவையான தேநீர்
ருசித்துப் பருகினர்
இளமையின் அவா
முதுமையில் நிறைவேற்றம் !

முகங்கள்



ஸ்ரீநிவாஸ் பிரபு

திமிர் ஒரு முகமூடி போல்
முன் வந்து நின்று கொண்டே இருக்கிறது.
அடக்கம் உள்ளுக்குள் பதுங்கி
எங்கோ அடங்கி மறைந்திருக்கிறது.
எனக்கு எல்லாம் தெரியும்
நான் யார் தெரியுமா வென
சொல்லிக் கொள்ளும் பெருமையும்
அவ்வப்போது
தலை நீட்டிக் கொண்டே இருக்கிறது
வாழ்வியல் செயல்பாட்டில்
இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன்
என்ற யதார்த்தம்
சிறு பிள்ளையின் சிரிப்பென
எப்போதாவது எட்டிப்பார்க்கிறது

டிப்ஸ்



நடேஷ் கன்னா

1. வாரத்துக்கு இரண்டு முறை பிரண்டை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் நரம்பு தளர்ச்சி குணமாகும்

2. முருங்கைக்கீரை அத்திப்பழம் இவற்றை சாப்பிட்டு வந்தாலும் நரம்புத் தளர்ச்சி குணமாகும்

3. செவ்வாழைப்பழம் சாப்பிட்டால் ரத்த சோகை நீங்கும்

4. வாழைத்தண்டு சாறு குடித்தால் சிறுநீரில் கற்கள் வெளியேறும்

5. கசகசா பாலை குடித்தால் நரம்புகள் பலப்படும்

6. எலுமிச்சை தேன் கலந்து குடித்தால் உடல் எடை குறையும்

7. கால்களில் எண்ணெய் மசாஜ் செய்தால் தூக்கம் நன்றாக வரும்

8. மணத்தக்காளி கீரை சாப்பிட்டால் வாய்ப்புண் குணமாகும்

9. இரவில் வெந்நீரில் நெய் கலந்து குடித்தால் மலச்சிக்கல் குணமாகும்

10. வேப்பிலை கலந்த நீரில் குளித்தால் உடல் அரிப்புகள் ஏற்படாது

List of Emergency Helpline Numbers All Over in India

Helpline Number	Department
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
104	State level Helpline for Health
108	Disaster Management / Medical Helpline
112	All in One Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT))
131	Indian Railway General Enquiry
139	Railway Enquiry
181	Domestic abuse and sexual violence-Women's Helpline
197	Directory Enquiry Service
198	Telephone Complaint Booking
1031	Anti Corruption Helpline
1033	Emergency Relief Centre on National Highways
1066	Anti-poison
1071	Air Accident
1072	Train Accident
1073	Road Accident / Traffic Helpline
1090	Anti terror Helpline / Alert All India
1091	Women Helpline in Distress
1092	Earth-quake Helpline Service
1096	Natural Disaster Control Room
1097	AIDS Helpline
1098	Child Abuse Hotline
1099	Central Accident and Trauma Services
1551	Kisan Call Center
1906	LPG Emergency Helpline Number
1910	Blood Bank Information
1919	Eye Donation / Eye Bank Information Service
1947	Aadhar Card - UIDAI (Unique Identification Authority of India), 1800-180-1947
1950	Election Commission of India
1800-11-4000	National Consumer Helpline





எம்.அசோக்ராஜா

1..அவரும் முகமூடி போட்டுக்கிறாரு.. நானும்முகமூடி போட்டுக் கிறேன்...ஆனா என்னயதான் போலீஸ் பிடிக்குது...
என்ன சொல்றே?
அவரு டாக்டராம் !

2..என் ஆபரேஷன் ஃபீஸ் 4 லட்ச ரூபாயா... ?
எப்படியோ உங்களைக் காப்பா த்திட்டேன்ல...?
என்னோட அடக்க செலவுகூட இவ்வளவு ஆகாது டாக்டர்!

3..டாக்டர் என்னோட ஆபரேஷன் செலவு ரெண்டு லட்ச ரூபாயா முகமூடி போட்டுக் கிட்டுத்தானே எனக்கு ஆபரேஷன் பண்ணீங்க...
அதுல என்ன சந்தேகம்?
அப்போ சந்தேகமே இல்லாம இது முகமூடிக் கொள்ளைதான் டாக்டர் !

4..நம்ம கடைல மைசூர் பாகு கெட்டுப் போச்சு முதலாளி...
சாப்பிட சாம்பிள் கேட்கிறவங்களுக்கு தயவு செஞ்சு அதைக் கொடுத்துடாதே !

5.முதலாளி கெட்டுப்போன மைசூர்பாக்க என்ன பண்றது ?
நல்ல மைசூர் பாகு கூட ஒண்ணு ஒண்ண கலந்து விட்டுடு !



நௌஷாத் கான்

பீச் ....

இங்கிலீஷ் படம் மாதிரி
லிப் டூ லிப் கிஸ் அடிக்கணும் என்ற முடிவோடு லாவண்யா–வை அழைத்து கொண்டு சென்றான்.
வழக்கத்திற்கு மாறாக
போலீஸ் கெடு பிடி மெரினாவில் அதிகமாய் இருந்தது .

இலவச தமிழ் புத்தகங்கள் கிடைக்கும் இணைய தளங்கள்... Just Click தொட்டால் இணையதளம் திறக்கும்... படித்து மகிழுங்கள்...

https://www.projectmadurai.org/

https://www.noolaham.org/

https://tamildigitallibrary.in/

https://www.tamilvu.org/

https://ta.wikisource.org/



எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் தஞ்சை ராம் ஆதி நாராயணின் கேள்வி பதில்கள்



கேட்பது சுலபமா?
பதிலளிப்பது சுலபமா?
'பெரியகுளம்' தேவா,
திண்டுக்கல்.

கேட்பது தான் சுலபம். பதிலளிப்பது சற்று கடினம்தான். கேள்வி கேட்பவர் திருப்தியடையும் விதத்தில் சரியான பதிலையும், யார் மனதும் புண்படுத்தாத பதிலையும் தர வேண்டுமே.

மலையாளத் திரை உலகம் போல் தமிழ் திரைப்படங்கள் கதையை நம்பி படம் எடுப்பதில்லையே?
எம்.பி.தினேஷ்,
கோவை

அப்படி இல்லை சார்! தமிழிலும் கதையை நம்பி எடுக்கப்பட்ட படங்கள் வருகின்றன சார்! சமீபத்தில் சிறை, தாய்க்கிழவி, டூரிஸ்ட் ஃபேமிலி.

இன்றைய சூழலில் நகைச்சுவை துணுக்குகள் மூலமாக மாற்றம்... புரட்சி... விளைவிக்க முடியுமா ?
ஆறுமுகம் நாகப்பன்

நகைச்சுவை துணுக்குகள் மூலம் மக்களை சிரிக்க வைப்பதே கவலைகளிலிருந்து மடை மாற்றும் புரட்சி தான் சார்!

'எழுதலாம் வாங்க' குழுமம் பற்றி ஒரு ஹைக்கூ..?
ஜி. சுந்தரமூர்த்தி, முசிறி

போட்டியில்லை

பொறாமையில்லை
பெருமையோடு

எழுதலாம் வாங்க!

நீங்கள் 'பாபா' படத்தில் ரஜினிக்கு, 'என் பெயர் பாபா...
எந்தப் பக்கமும் சாயாத பாபா' என்று பஞ்ச் எழுதியது போல், கமல் நடிக்கும் படத்தில் எழுதினால் கமலுக்கான பஞ்ச் எப்படி இருக்கும்?
ஸ்ரீநிவாஸ் பிரபு, சென்னை

கமலுக்கான பஞ்ச்...

'நான் சாமி இல்லன்னு சொல்லல...
அன்பு காட்டற ஆசாமி தான்
சாமின்னு சொல்றேன்.'

வாழ்க்கை இன்பமா? துன்பமா?
முத்தூஸ், தொண்டி

இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை. துன்பத்தையும் இன்பமாக மாற்றிக்கொள்வது நம் கையில்தான் இருக்கு.

எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் தஞ்சை ராம் ஆதி நாராயணின் கேள்வி பதில்கள்

மானிடப் பிறவிகளுக்கு தாங்கள் கூற விரும்பும் கருத்து யாது?
முத்துஸ், தொண்டி

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது. கிடைத்துள்ள இந்த மானிடப் பிறவியில் யாரும் நம்மை ஒதுக்காத அளவுக்கு, யாரும் நமக்கு எதிரி இல்லை என்று சொல்லும் அளவுக்கு எந்த வம்புதும்புக்கும் போகாம வாழ்ந்துட்டாப் போதும்.

சமீபத்தில் படித்த புத்தகம் பற்றி..?
என். காளிதாஸ், சிதம்பரம்

தஞ்சை நண்பர், ஹைக்கூ கவிஞர் 'பாணாஸ்' சாயிராம், 'கூடை நிறைய குபேர பொம்மைகள்' என்கிற ஹைக்கூ புத்தகம் தந்தார். அதைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன். அதில் உள்ள ஹைக்கூகள் சில...

தேங்கிய நீரை/ பீச்சியடிக்கும்
பேருந்தில்/ 'மழைநீர் சேமிப்போம்'
வாசகம்.

பேருந்து படிக்கட்டில்/
சில்லறை எடுக்க முயன்றவன்/
நெற்றியில் நாணயம்.

மனு கொடுத்துவிட்டு/வாசல்
திரும்புகிறேன்/
காணவில்லை செருப்பு.

குடிகாரனின் மனைவி/சுமக்கும்
கூடையில்/
குபேர பொம்மைகள்.

முத்துமணி மாலை/
எத்தனை முறை எண்ணினாலும்/
ஒரே இறைவன் தான்.

பத்திரிகை வாசகர்களில்
யாரை பார்த்து வியப்படைவதுண்டு?
அயன்புரம்
சத்தியநாராயணன்

தொடர்ந்து வாராவாரம் ஆரவாரமாக பத்திரிகைகளில் படைப்புகளையும், பெயர்களையும் வர வைத்துக் கொண்டிருக்கும் பத்திரிகை வாசக எழுத்தாளர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து வியப்படைகிறேன் சார்!
அவர்கள் தான் நானும், மற்றவர்களும் தொடர்ந்து எழுத உத்வேகம் தருபவர்கள்.
அதில் தாங்கள்தான் எங்களுக்கு எல்லாம் முன்னோடி.

பெண் எழுத்தாளர்களுக்கு தாங்கள் தரும் ஆலோசனை என்ன?
கோவைக்கவி புவனா

பெண் எழுத்தாளர்கள் பெரும்பாலும் அழகியலான கவிதைகள், குடும்பச் சிறுகதைகள், சீரியஸான நாவல்கள் எழுதுகிறார்கள். ஆனால், பெண் எழுத்தாளர்கள் ஜோக்ஸ் பக்கம் வருவதில்லை. க்ரைம் கதைகள் எழுதுவதில்லை.
நகைச்சுவைகளும், க்ரைம் கதைகளும் பெண் எழுத்தாளர்கள் எழுத வேண்டும். அட்வான்ஸ் வாழ்த்துகள்!

தங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம் குறித்து கூறுங்கள் சார்?
மு.குமரன், பண்ணந்தூர்

என் வாழ்வில் இன்று வரை மறக்க முடியாத சம்பவம் என்னைவிட ஒரு வயது குறைந்த எனது தம்பியை 2007-ல் எதிர்பாராத விதமாக இழந்ததுதான். நானும், தம்பியும் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை ஒரே வகுப்பில் சேர்ந்து படித்தோம். அதற்குப் பிறகே வெவ்வேறு குரூப் எடுத்துப் படித்தோம். 2005-ல் தம்பிக்கு திருமணம் ஆனது. 2007-ல் மாஸ்மிவ் ஹார்ட் அட்டாக்கில் தம்பி காலமானார். தம்பி சிறுவயதிலிருந்தே என் கூடவே இருந்ததால் அவரது நினைவுகளை மறக்க முடியவில்லை.
என் பெயரில் உள்ள 'ராம்' என் தந்தையையும், தம்பியையும் குறிக்கும் விதத்தில் வைத்துள்ளேன்.
(அப்பாவின் பெயர் ராமமூர்த்தி, தம்பியின் பெயர் ராமச்சந்திரன்)

சாதியை ஒழிக்க நல்ல ஒரு வழியை சொல்லுங்களேன்?
மு. குமரன் பண்ணந்தூர்

அரசு வழங்கும் பிறப்புச் சான்றிதழ்களிலிருந்தே சாதியை ஒழிக்க வேண்டும். ஆனால், அதை எந்த அரசும் செய்யாது. நடிகர்கள் கமல்ஹாசன், பார்த்திபன் செய்திருப்பது போல் 'சாதியற்றவர்'களாக எல்லோரும் மாற வேண்டும். அப்போதுதான் சாதி ஒழியும்.

எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் தஞ்சை ராம் ஆதி நாராயணின் கேள்வி பதில்கள்

உங்கள் 'பஞ்ச்' நாங்கள் ரசிக்க வேண்டும்... அதற்கு மீண்டும் நீங்கள் எழுத வேண்டும்... 'பட்டு'ன்னு உங்கள் கருத்தை தெளிவு படுத்துங்கள் ப்ளீஸ்...
எம். கல்லூரிராமன்,
ராமநாதபுரம்

பஞ்ச்சுக்கு சரியாக சன்மானம் அனுப்பினால் தொடர்ந்து எழுதலாம் சார்!
சரியாக சன்மானம் அனுப்பாத இதழ்களுக்கு மாங்கு மாங்கு என்று நேரம் ஒதுக்கி எழுதுவதில் எனக்கு உடன்பாடு இல்லை சார்!

இந்த டிஜிட்டல் உலகின் அபரிமிதமான வளர்ச்சிக்கு முன் இனி அச்சு உலகம் எவ்வளவு காலம் தாக்கு பிடிக்கும் என கருதுகிறீர்கள்?
வலம்புரி நாகராஜன்,
ஈரோடு

டிஜிட்டல் உலகின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது. ஆனாலும், அச்சு உலகம் முழுமையாக அழிந்து விடாது. என்னதான் டிஜிட்டல் வளர்ச்சி இருந்தாலும் அச்சில் செய்திகளையும், படைப்புகளையும் பார்க்கும் சுகமே தனி. அச்சு உலகம் அழிந்துவிடக்கூடாது என்று பிரார்த்திப்போம்.
[12:08 pm, 14/6/2026] ராம்ஸ்:
உலகமயமாக்கலில் நாம் தொலைத்தது என்ன? அடைந்தது என்ன சார்?
குடந்தை பரிபூரணன்.

உலகமயமாக்கலில் நாம் தொலைத்தது சுதேசி பொருட்களை, சுதேசி பொருட்களை உருவாக்குவோர் வாழ்க்கையை. அடைந்தது உலக நாடுகளுக்கிடையேயான நம் நாட்டின் நட்புறவு மற்றும் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி.

திரை உலகில் உங்கள் நகைச்சுவையை சுட்டு உள்ளார்களா?

ஆறுமுகம் நாகப்பன்

திரைப்படங்களில் இல்லை சார்! ஆனால், டி.வி.யில் காமெடி ஷோக்களில் நிறைய சுட்டுள்ளார்கள்.



முத்து ஆனந்த்

✍ வரம்

உனக்காக
எண்ணற்றவர்
காத்திருக்க
நீயோ
எனக்குக்
காதல் வரமாக
வந்தாய்!

✍ ஆட்டம்


என்னதானடி
வைத்திருக்கிறாய்?
உன்
ஒவ்வொரு சிரிப்பிலும்
என்னை
இப்படி ஆட்டிப் படைக்கிறதே!

✍ பேரழகு

உன்
மௌனம் கூடப் பேரழகுதான்
அன்பே!
அது
என்னுடன்
பேசும்போது!

✍ வார்த்தை

நீ
அழைக்கும் போது தான்
'மாமா' என்பது கூட
'காதல் வார்த்தை'
என்று உணர்ந்தேன்!



எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் திரு.வி.சி.கிருஷ்ணரத்னம் அவர்களின் கேள்வி பதில்கள்



எஸ். வைத்தியநாதன், மதுரை.

1. எந்தப் பத்திரிகையில் என்று முதன்முதலாகத் தங்களது ஜோக் வந்தது? சன்மானம் எவ்வளவு? அந்த ஜோக் நினைவிலிருந்தால் பகிருங்களேன்.

கல்கி பத்திரிகையில். அப்போது சன்மானம் மிகவும் குறைவு. நம் பெயரை பத்திரிகையில் பார்த்தாலே பெருமை என்று நான் நினைத்த காலம் அது. ஜோக்கு நினைவில் இல்லை.

2. உங்களை மிகவும் கவர்ந்த ஜோக்ஸ் எழுத்தாளர்கள் யாவர்? அவர்களின் ஜோக்ஸ்களை நினைவு கூர இயலுமா?

அனைத்து ஜோக்ஸ் எழுத்தாளர்களையும் பிடிக்கும். அவற்றை நினைவு படுத்தி சொல்ல நேரம் போதாது.

3. பிரசுரம் கண்ட உங்களது முதல் கவிதை/துளிப்பா எது?

அதுவும் கல்கி பத்திரிகையில் தான். அது தற்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் என்னிடம் இருக்கும் வேறு துளிப்பாக்களை பதிவிடுகிறேன்.

கேள்வி: லால்குடி வெ. நாராயணன்

1. சிலர் வந்த ஜோக்குகளை காப்பியடித்து எழுதுவதையே வழக்கமாக கொண்டிருக்கிறார்களே !

அப்படியே காப்பி அடிப்பது தவறு. மற்ற நண்பர்களின் நல்ல ஜோக்குகள் நம்முள் பதிந்து, என்றாவது வேறு வடிவில் வெளிப்படுவது தவிர்க்க முடியாதது. அது எனக்கு ஏற்பட்டுள்ளது.

2. அதையும் சில பத்திரிகைகள் பிரசுரிப்பது எதைக் காட்டுகிறது?

பத்திரிகைகளில் ஜோக்கு தேர்ந்தெடுப்பவர்கள், அனைத்து மற்ற இதழ்களையும் படித்திருக்க மாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

3. இது போன்ற காப்பி ரைட்டர்ஸ் திருந்துவதெப்போது?


திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது!

கேள்வி: AR வலம்புரி நாகராஜன், ஈரோடு.

1. அன்றைய பத்திரிக்கைகளுக்கும்,இன்றைய பத்திரிக்கைகளுக்கும்,நீங்கள் காணும் வேறுபாடுகள் என்ன??
பத்திரிகைகளின் விலை. அது தற்போதைய காலத்தில் தவிர்க்க முடியாதது. தரம் இருந்து அதற்கு அதிகமான விலை கொடுப்பது தவறில்லை.

2.எந்த பத்திரிக்கைகளின் வரும் கேள்வி–பதில் சிறந்ததாக கருதுகின்றீர்கள்???
நமது 'எழுதலாம் வாங்க' குழுவில் கடந்த மாதங்களில் வெளிவந்த 'கேள்வி–பதில்'கள் அற்புதமாக இருந்தது.

3.அச்சு இதழ்களின் நாளைய எதிர்காலம் எப்படிப்பட்டதாக இருக்கும்???
அச்சு இதழ்களின் எதிர்காலம் கடினம். எழுத்தாளர்கள் மின்னிதழ்களுக்கு மாறவேண்டும்.



எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் திரு.வி.சி.கிருஷ்ணரத்னம் அவர்களின் கேள்வி பதில்கள்



கேள்வி: ஆ.மாணிக்கம், பொள்ளாச்சி

1. காதல் தெய்வீகமானது என்கிறார்கள் சிலர்.காதலுக்கு கண்ணில்லை என்பாரும் உண்டு.இதில் எது சரி ?

'காதல் என்பது இனிமையானது..
அந்த இறைவன் போன்றது
புனிதமானது..
கையோடு கைகள் சேர்க்கும் காதல்..
கண்ணாலே கோயில் கட்டும் காதல்'
என்பார்கள்.

கண்கள் சேர்த்து வைத்த காதலை விடவும்; மனங்கள் சேர்ந்து, பிறந்த காதலுக்கு பிரிவேயில்லை என்பதே சரி.

2. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருக்கிறாள் .பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஆண் இருப்பதாகச் சொல்வதில்லையே ?

ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் என்பது என்னைப் பொருத்தவரை உண்மை. நான் மனம் துவளாமல் என்னைக் காத்தவர் என் தாய்; அவருக்கு பின் தற்போது எனது தாரம்!

3. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று சொல்கிறார்களே வாரவாரம் புதன் வந்து கொண்டுதானே இருக்கிற து ?

அது அடுக்கு வார்த்தை ஜாலம்...
எல்லா நாளும் நல்லவையே.

கேள்வி: சி.ஆர். ஹரிஹரன், கேரளா.

1.கேள்வி.... உழைப்பாளிகளின் வியர்வை ஆறும்முன் அவர்களின் ஊதியத்தை கொடுத்துவிட வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் பல தமிழ் வார இதழ்களும், மாத இதழ்களும் படைப்பாளிகளுக்கு சன்மானம் தர மறுக்கிறதே? இதன் காரணம் என்ன?


பத்திரிகைகளின் விற்பனை முன் போல் இல்லாதது முக்கிய காரணம். வாசிப்பு, 'பிரிண்ட் மீடியா' என்ற தளத்திலிருந்து, 'டிஜிட்டல் மீடியா' என்ற தளத்திற்கு நகர்ந்து விட்டது.

2. கேள்வி.... நீங்கள் எழுதி வெவ்வேறு தமிழ் இதழ்களில் பிரசுரமானதும் உங்களுக்கு மிகவும் பிடித்ததுமான ஐந்து ஜோக்ஸ் சொல்ல முடியுமா?

முடியும். குங்குமம் இதழில் 1991–ல் வெளியானது ஒன்று சும்மா சாம்பிளுக்கு...


3. கேள்வி..... நமது எழுத்துத்திறமையை மட்டும் நம்பி இவ்வுலகில் பிழைக்க முடியுமா?

முன்னர் பிரபலமான எழுத்தாளர்கள் அப்படி இருந்தார்கள். தற்போது அப்படி இருந்தால் வாழ்வது கடினம்.



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்



எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் திரு.வி.சி.கிருஷ்ணரத்னம் அவர்களின் கேள்வி பதில்கள்



கேள்வி: ராம் ஆதி நாராயணன், தஞ்சாவூர்.

1. ஆல் ரவுண்டராக எழுத்திலும், விளையாட்டிலும், பொதுஅறிவு போட்டிகளிலும் இளைஞராகக் கலக்குறீர்கள்... இந்த தங்களுடைய எனர்ஜிக்கு என்ன காரணம்?

முதலில் என்னை இளைஞர் என்றதற்கு எனது நன்றி. எனக்குள் இருக்கும் ஆர்வமே அப்படி செயல் படுகிறது.. மேலும், 'வெற்று மனம் என்பது பிசாசின் பட்டறை' என்று சொல்வார்கள். அதற்கு இடமளிக்காமல் ஏதாவது செய்து கொண்டிருக்கிறேன்...

2. ஒரு நாளைக்கு எழுதுவதற்காக தாங்கள் ஒதுக்குவது எத்தனை மணி நேரம்? எழுதுவதற்குச் சிறந்த நேரமாக தாங்கள் கருதுவது எந்த நேரம்?

சுமார் இரண்டு மணி நேரம் எழுதுவேன். பாதி தூக்கத்தில் எழுந்து எழுதியிருக்கிறேன்... இரயில் பயணத்தில் திடீரென தோன்றும் ஜோக்குகளை நின்றபடியே எழுதியிருக்கிறேன்... எனக்கு நல்ல படைப்பு தோன்றும் நேரமே, சிறந்த நேரம்!

3. தங்களை அதிகம் கவர்ந்த பத்திரிகை இதழ் எது? என்ன காரணம்?

மற்றவர்கள் திறமையை புலப்படுத்துவதால் பத்திரிகை எல்லாமே பிடிக்கும்.





திரு.வி.சி.கிருஷ்ணரத்னம் அவர்களின் கேள்வி பதில்கள் அடுத்த இதழிலும் தொடரும்...



கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

